<u>**Sub Court, Eraniel**</u>

**O.S. No.141/2023**

Date: 18.06.2025.

வா.சா.2 - திரு. அபிஷேக்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்திற்கு வட்டியை குறித்து விபரங்களை வழக்குரையிலோ, முதல்விசாரணை வாக்குமூலத்திலே குறிப்பிட்டு சொல்லவில்லை. வழக்குரையில் பிரதிவாதி எந்த தேதிவரை வட்டி செலுத்தினார் என்றும், அதற்கு பிறகு செலுத்தவேண்டிய பாக்கி தொகை எவ்வளவு என்ற விபரங்களை குறிப்பிட்டுசொல்லவில்லை. பிரதிவாதிக்கு கடனாக பணத்தை கொடுக்காததால் வட்டி பற்றி கூறுவில்லை என்றால், முதலில் கடனாக கேட்டார், பின்னர் 2 Vacancy இருப்பதாக சொல்லி வேலைக்காக பணம் கேட்டார். பின்னிட்டு சாட்சி கடனாக கேட்டார் என்று கூறுகிறார். கடனுக்காக ரூ.9 லட்சம் பிரதிவாதியிடம் கொடுத்தேன். எனது வழக்குரை, வழக்கறிஞர் அறிவிப்பு, மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ரூ.9 லட்சத்தை பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தாக நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.1ம் வாதி 3 லட்சமும், நான் 1,45,000/- பிரதிவாதிக்கு கொடுத்தற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். வங்கி கணக்கு விபர பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-7 ஆவணத்தில் மேற்படி ரூ.3,00,000/- மற்றும் 1,45,000/- கொடுத்தது துலங்கவில்லை என்றால், சாட்சி ஆவணத்தை பார்த்துவிட்டு துலங்கவில்லை, தொகையை பணமாக கொடுத்தேன் என்று கூறுகிறார். வா.சா.ஆ 7 ஆவணத்தில் Gold Loan என்பது பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் அருகில்

அவ்வாறு எழுதியவரின் சுருக்கொப்பம் பதியவில்லை என்றால், சரிதான். அதில் வங்கியின் முத்திரை உள்ளது. வா.சா.ஆ–7ல் 3 Gold Loan வைக்கப்பட்டதாக பேனாவினால் எழுதப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். வா.சா.ஆ 7 னை வங்கி கணக்கு விபரபட்டியலில் வங்கியில் இருந்து பெற்றபிறகு நானாக எழுதி இருக்கிறேன் என்றாலும், அதனை வங்கியில் எழுதியிருந்தால் அவர் சுருக்கொப்பம் செய்திருப்பார் என்றால், சரியல்ல. 21.09.2023 இரண்டுமுறை பணம் வந்தது என்பது, பிரதிவாதியின் அக்கொண்டில் இருந்து வரவில்லை என்றால் சரிதான். அவர் மனையின் Account இல் இருந்து எனது தாயாரின் Account க்கு வந்தது. வா.சா.ஆ 1 அடமான பத்திரம் எழுதிய அன்று பிரதிவாதி எங்களிடமிருந்து எந்த பணமும் வாங்கவில்லை என்றால், சரிதான். எனது வழக்குரையில் 6 வது பத்தியில் 31.01.2023 ல் அடமான பத்திரம் எழுதுவதற்கு முன்பு கொடுத்த தொகை ரூ.3 லட்சம் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த பக்கத்தில் 2 வது வாதியால் 31.01.2023 அடமான பத்திரம் எழுதுவதற்கு முன்பு பிரதிவாதிக்கு கொடுத்த தொகை ரூ.1,45,000/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். (சாட்சி அதற்கு நான் explanation தரவேண்டும் என்று கூறுகிறார்). நான் சொல்வதுபோல் 21.09.2022 அன்று வாதிகளாகிய எங்களுக்கும் பிரதிவாதிக்கும் எந்த கொடுக்கல் வாங்கலும் வழக்குரையில் குறிப்பிட்டப்படி நடக்கவில்லை என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.